
# காத்தவராயர் மான்மியம்

அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான

50/- வருடாந்த உற்சவ கால ஆன்மிக இதழ் 2020





அல்வாயூர் எல்லையிலே இனிதமரும் குலதெய்வம்
பல்காலும் எல்லவர்க்கும் அருள் தெய்வம் - வல்லோனாய்
திரோதான சக்திதரும் காத்தான் உடனுறையும்
வரசித்தி விநாயகரை வாழ்த்து

- த.கலாமணி

**இதழ் - 1** **காத்தவராயர் மான்மியம்** **2020**

வருடாந்த உற்சவ கால ஆன்மிக இதழ்

அல்வாய் ஊர் எல்லையில் வீற்றிருந்து எம் ஊரவர்கள் அனைவரையும் காத்து நிற்கும் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் பாதங்களை வணங்குகின்றோம். 2019 ஆம் ஆண்டு முதல் எமது ஆலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. காத்தவராயரின் சிறப்புகளை கூறும் இதழாக இவ்விதழ் இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது. தன்னை நம்பி வந்து வேண்டுபவர்கள் குறைகளை தீர்த்து வைப்பவர் எமது காத்தவராயர் சுவாமி. அன்போடும் பக்தியோடும் ஆணவம் தவிர்த்து விட்டுக்கொடுப்புகளோடு வாழும் மனிதனிடத்து இறைவன் சஞ்சரிக்கின்றான். எமது காத்தவராயர் சுவாமி படிப்படியான வளர்ச்சி கண்டு வருவதை நீங்கள் அனைவரும் கண்ணுற்று வருகின்றீர்கள். இறைவனது கோயில் வளர்ச்சி காணக் காண அந்த ஊரின், ஊரவரின் வளர்ச்சி உயர்ந்து கொண்டே செல்லும். இந்த இதழை எமது அல்வாய் ஊரைச் சேர்ந்தவர்களே அலங்கரித்துள்ளார்கள். சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரது ஆக்கங்களையும் தாங்கி இந்த இதழ் வெளி வருகின்றது. இந்த இதழ் காத்தவராயரின் புகழை மேலும் ஓங்கச் செய்யும் என்ற நம்பிக்கையோடு இந்த இதழை வெளியீடு செய்து வைக்கின்றேன். ஆண்டு தோறும் திருவிழாக்காலத்தில் இவ்இதழ் வெளிவர இறைவன் அருள் பாலிக்க வேண்டும்.

- க.பரணீதரன்

ஆசிரியர் : க.பரணீதரன்
வெளியீடு : காத்தவராயர் தேவஸ்தானம்
தொடர்பு : கலைஅகம், அல்வாய்
தொலைபேசி:0775991949 FB : அல்வாய் காத்தவராயர்

க.பரணீதரன்

# விநாயகர் வழிபாடு

ஆலயங்களில் முதலில் வணங்கப்பெறுபவர் விநாயகர் ஆவார். இந்து சமயம் ஆறு பிரிவுகளைக் கொண்டதாகக் குறிப்பிடுவர். அவற்றுள் ஒன்று காணபத்தியம். காணபத்திய நெறியினர் முழுமுதற்கடவுளாக விநாயகரை வழிபடுவர். சைவ சமயத்திலும் விநாயகருக்கு முதலிடம் வழக்கப்பட்டுள்ளது. விநாயகரை வணங்கிய பின்பே ஏனைய கடவுளரை வணங்க வேண்டும் என்ற நியதி சைவ சமயத்தில் கடைப்பிடிக்கப்படுகின்றது. விநாயகர் வழிபாடு இலங்கையிலும் இந்தியாவிலும் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் மேற்குலக நாடுகளிலும் பரவி நன்கு வளர்ச்சி அடைந்து வருகிறது. பௌத்தம், சமணம் ஆகிய சமயத்தவர்களும் கூட விநாயகரைப் போற்றி வழிபடுகின்றனர். விநாயகருக்கான "சுக்கிலாம் பரதரம்..." என்ற சுலோகத்திலே, "வெள்ளுடை தரித்தவர், யாவினும் மேலானவர், சந்திரன் போலும் குளிர்மையும் நிறமும் பொருந்தியவர், நான்கு புயங்கள் உடையவர், எப்போதும் மலர்ந்த புன்னகையுடன் கூடிய திருமுகத்தினர், எல்லாத் தடைகளையும் போக்கியருள்பவர்" விநாயகர் எனக் குறிப்பிடப்படுகின்றது. விநாயகருக்கு கணபதி, விக்னேஸ்வரர், கணேசன், பிள்ளையார், ஆனைமுகன், வக்ரதுண்டர், லம்போதரர், கஜானனர், ஏகதந்தர் போன்ற திருநாமங்கள் உள்ளன. விநாயகரை களிமண்ணினாலும் புற்று மண்ணினாலும் வெள்ளெருக்கு வேரினாலும் வெல்லத்தாலும் உப்பினாலும் வேப்ப மரத்தினாலும் கூட திருவுருவம் அமைத்து வழி படலாம். விநாயகரது திருவுருவத்தை கோயில்களிலும் வீடுகளிலும் சந்திகளிலும் ஆற்றோரங்களிலும் குளக்கரைகளிலும் புனிதமான மரங்களுக்கடியிலும் வைத்து மக்கள் அவரை வணங்கி வருவதைக் காணலாம். வணங்குவதற்கு எளியவரான விநாயகர் தம்மை வணங்கு வோரின் விக்கினங்களைக் களைந்து இஷ்ட சித்திகளையும் வரசித்திகளையும் வழங்கி வருகிறார். நாம் அனைவரும் விநாயகரைத் துதிப்போமாக.

கலாநிதி த. கலாமணி

# காத்தவராயர் வழிபாடு

மனிதன் தனது ஆற்றல் ஒரு வரம்புக்குட்பட்டது என்று உணரத் தொடங்கிய நிலையிலேயே வழிபாடு எனும் "கடவுட் கோட்பாடு" தோற்றம் பெற்றது என்பர். மனிதன் இயற்கையின் சீற்றங்களைக் கண்டு அஞ்சி, தனக்கும் மேலான சக்தியை வழிபடுவதன் மூலம் அவற்றை அமைதிப்படுத்த முடியும் என்று நம்பினான். இந்நம்பிக்கை காரணமாக இயற்கையை அவன் வழிபடத் தொடங்கினான்.

நாளடைவில் உயர் குறிக்கோள்களுக்காக உயிர் நீத்தவர்களையும் அருளாற்றல் மிக்க பெரியார்களையும் நடுகல்நாட்டி வழிபட்டான். இது மூதாதையர் வழிபாடு அல்லது நடுகல் வழிபாடு எனப்படுகிறது. இந்நடுகல் வழிபாடு தொல்காப்பிய காலத்திற்கு முற்பட்டதாகும். இந்நடுகல் வழிபாடு மேலும் வளர்ச்சியடைந்து நாட்டார் தெய்வ வழிபாடாக தமிழர் வாழுமிடம் எங்கும் பரவியது. நடுகல் வழிபாட்டின் வழிவந்த நாட்டார் தெய்வங்கள் அருளாற்றல் உள்ளன. இத்தெய்வங்கள் தம்மை வழிபடுபவர்களை துன்பம், நோய் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு அளித்து காத்து வருகின்றன என்ற நம்பிக்கை மக்களிடையே உண்டு. கிராமிய மக்கள் இத்தெய்வங்களுக்கு பொங்கல், மடை முதலியன படைத்து பல சடங்குளைச் செய்து வழிபடுகிறார்கள்.

நாட்டார் தெய்வங்களை சிறுதெய்வங்கள் எனக் குறிப்பிடும் வழக்கம் மக்களிடையே உள்ளது. ஆனால், தெய்வங்களில் சிறு தெய்வம், பெருந்தெய்வம் என்று ஏதுமில்லை. ஆதியில் முதல் தமிழ்ச் சங்கத்தின் தலைவனான சிவனும் இரண்டாம் தமிழ்ச்சங்கத்தின் தலைவனான குறிஞ்சி நிலக்கடவுள் முருகனும்(சேயோனும்) இந்திரனும் பிரம்மா, திருமால் ஆகியோருமே தெய்வங்களாக

வழிபடப்பட்டனர். இதன் பின்னரே பல்வேறு தெய்வங்கள் பெருந் தெய்வங்களாக மேலும் வழிபடப்பட்டன. நாட்டார் தெய்வங்களாக அண்ணமார், இளந்தாரிமார், சுடலைமாடன், காத்தவராயன், வதனமார், நாச்சிமார் போன்றவை போற்றப்பட்டன. மனிதர் தமது இயல்புகளுக்கேற்ப வழிபாடு இயற்றும் முறைமையே கிரியை அல்லது சடங்கு எனப்பட்டது. இவ்வகையில் இவ்வழிபாடு இரு வகைப்படும். அவையாவன:

1. ஆகம சிற்ப சாத்திர முறைமைகளுக்கமைந்த வழிபாட்டு முறைமை
2. ஆகம சிற்ப சாத்திர முறைமைகளுக்கு அமையாத வழிபாட்டுமுறைமை

ஆகமங்களும் சிற்ப சாத்திரங்களும் கூறும் விதிமுறைகளுக் கமைய பூசைகளும் கிரியைகளும் செய்து வழிபடப்படும் தெய்வங் களே பெருந்தெய்வங்கள் என அழைக்கப்பட்டனர். இவ்வாறான சாத்திர விதிகளுக்கு அமையாது பொங்கல், படையல் இட்டு வழிபடப் பெறுவதனால் நாட்டார் தெய்வங்கள் சிறு தெய்வங்கள் என அழைக்கப்படும் வழமை ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இப்பாகு பாடு ஒவ்வாதது என்றும் படிப்படியாக ஏற்பட்ட மனித இனச் சிந்தனை வளர்ச்சி காரணமாகவே வழிபாட்டு முறைமையில் பாகுபாடுகள் தோன்றின என்றும் அறிஞர் கூறுகின்றனர்.

நாட்டார் தெய்வங்களை குலதெய்வம், ஊர்த்தெய்வம், காவல் தெய்வம், கிராமியத் தெய்வம் போன்ற பெயர்களாலும் அழைப்பர். இத்தெய்வங்கள் இலங்கையில் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேச மக்களால் வணங்கப் பெறுகின்றன.

நாட்டார் தெய்வங்களின் தோற்றம் குறித்த பல கதைகள் மரபுவழிக் கதைகளாக மக்களிடையே வழங்கி வருகின்றன. காத்தவ ராயனின் கதை, பிறப்பு பற்றி ஆராயினும், பல்வேறுபட்ட கதைமரபுகள் வழங்கி வருவதைக் கண்டறியலாம். தென்னிந்தியாவில் வழங்கி வரும் காத்தவராயன் கதைகளில் முருகன் காத்தவராயனாக அவதாரம் எடுத்த செய்தி கூறப்படுகிறது. காத்தமுத்து நாடகம் என்ற நூலில் சிவனது கட்டளைப்படி, உமாதேவியார் பூலோகத்தில் பிறந்து நந்தவனங்கள் அமைத்து தவமிருந்த போது, அந்த நந்தவனத்தின் காவலனாக முருகன் அவதரித்து காவல் காத்தமையால் காத்தவராயர் என்ற பெயரைப் பெற்றதாக கதை அமைந்துள்ளது.

இலங்கையில் வழங்கி வரும் காத்தவராயன் சிந்து நடைக் கூத்தின் கதையானது, முத்துமாரியம்மனுக்கு சிவனின் அருளால் கிடைத்த குழந்தையே காத்தவராயன் என்றும் முத்துமாரியம்மன் தவம் இருக்கையில் கங்கை பெருகி வந்தபோது காலால் எட்டி உதைத்துத் தடுத்துக் காத்தமை யால், காத்தான் அல்லது காத்தவன் என்ற பெயரைப் பெற்றதாகவும் கூறுகிறது.

காத்தவராயர் வழிபாடு தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்ததாக ஆய்வாளர் கூறுவர். பொதுவாக, காத்தவராயர் ஆலயம் ஒன்று அமைந்த இடத்திலிருந்து பிடிமண் எடுத்துச் சென்றே பிற இடங்களில் காத்தவராயர் ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற ஐதீகம் நிலவி வருகின்றது. தென்னிந்தியாவில் வசதி படைத்த இடங்களில் இன்று காத்தவ ராயருக்கு தனியாக பெருங்கோயில்கள் உள்ளன. ஆனால், இலங்கை யில் காத்தவராயன் சுவாமி வழிபாடு மாரியம்மன் கோயிலைச் சார்ந்தே பெரிதும் இடம்பெற்று வருகிறது.

வல்வை முத்துமாரி அம்மன் வழிபாட்டில் காத்தவராயர் வழிபாடு முக்கியத்துவம் பெறும். காத்தவராயரின் சிறப்பு வழி பாடாக தேர் உற்சவத்தின் போது மடை வைத்து விசேட வழிபாடுகள் இடம்பெறும். அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலைத் தாபிப்பதற்கு காரணமாக இருந்தவரான வீரமாங்கானை முதலியார் வழிவந்த வன்னி நாச்சியார், நாட்டுக் கூத்தான காத்தவராயன் கூத்து பார்க்கப் போகும் வழக்கமுடையவராக இருந்தார். முத்துமாரியம்மனுக்கு கோயில் அமைத்தபோது, அங்கு காத்தவராய சுவாமி வழிபாடும் இடம் பெற்று வந்தது.

காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலிலும் கிராமங்களில் அமைந்திருக்கும் காமாட்சி அம்மன் கோயில்களிலும் முதன்மை யான காவல் தெய்வமாக வழிபடப்படுபவர் காத்தராயர் ஆவார். காத்தவராயனை முதலில் வணங்கிய பிறகுதான் காமாட்சி அம்மனை வழிபட வேண்டும் என்ற வழமை அங்கு தொன்று தொட்டு இருந்து வரும் நடைமுறையாகும். காவல் தெய்வமான காத்தவராயனின் அனுமதி இருந்தால் மட்டுமே காமாட்சி அம்மனின் அருள் கிடைக்கும் என்பது அங்குள்ள மக்களின் நம்பிக்கையாக உள்ளது. காமாட்சி அம்மன் கோயில்கள் அனைத்திலும் காத்தவராயனை அடையாளப்படுத்த கழுமரம் அல்லது பலிபீடம் அமைக்கப் பட்டிருக்கும்.

மட்டக்களப்பில் மாரியம்மன் கோயில்களில் காத்தவராய சுவாமிக்கு வழிபாடு நடைபெறுவது வழக்கமாகும். மாரியம்மன் சடங்கு நிகழும்போது காத்தவராயராக உருக்கொண்டு தெய்வமாடும் பக்தர் பலர் உள்ளனர். மலையகப் பகுதிகளிலும் வன்னிப் பகுதியிலும்கூட மாரியம்மன் வழிபாட்டுடன் காத்தவராயர் வழிபாடும் நடைபெறுகின்றது. மாரியை வழிபடும் பக்தர்கள் மாரிபுதல்வனையும் வழிபட்டு காத்தான் கூத்தை நேர்த்தியாக நடத்தி மாரியின் அருள் வேண்டுகின்றனர்.

வடமராட்சியிலுள்ள அல்வாய் கிராமத்தில் அமைந்துள்ள காத்தவராயர் கோயில் சுமார் முந்நூறு ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது. அல்வாய் கிராமத்தில், ஊர் எல்லையில் வடக்கு நோக்கி காத்தவராயர் கோயில் அமைந்துள்ளது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மர நிழலில் காத்தவராயர் சுவாமியை ஆதரித்து வந்த பெரியார் கதிரன் என்பவரூடாக சந்ததி சந்ததியாக காத்தானை விளக்கு வைத்து, பூசை செய்து ஆதரிக்கும் பொறுப்பு கையளிக்கப் பட்டு, இன்று ஆறாவது சந்ததியில் உள்ளவரான க.பரணீதரன் இப்பொறுப்பை ஏற்று அர்ச்சகராகவும் விளங்கி வருகிறார்.

"வெடிக்காத்தான்" என்று அழைக்கப்பட்டு வந்த காத்தவராயர் கோயில் படிப்படியாக முன்னேற்றம் கண்டு, புனருத்தாரணம் செய்யப்பட்டு, மாமல்ல புரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வரசித்திவிநாயகரை மூலவராகக் கொண்டு "வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்" என்ற பெயரையும் பெற்றுள்ளது. சென்ற ஆண்டியிலிருந்து பத்து நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும் சிறப்பையும் இது பெற்றுள்ளது. அல்வாய்க் கிராமத்தவர் தமது குலதெய்வமாக காத்தவராயரை வழிபட்டு வருகின்றனர்.

உலகளாவிய ஒலியான ஓம் என்னும் மந்திரம் "அ", "உ", "ம்" ஆகிய மூன்று அசைகளால் உருவானது. நாம் "அ" என்று ஓசை எழுப்பும்போது உடம்பின் கீழ் பகுதி முதல் வயிறுப் பகுதிவரை இயக்கம் பெறுகிறது. "உ" ன்று உச்சரிக்கும்போது மார்புப்பகுதிகள் இயக்கம் பெறுகின்றன. "ம்" என்ற ஒலி முகம் மற்றும் மூளைப் பகுதியைத் தூண்டும். "ஓம்" எனும் மந்திரம் நம்மை தியான நிலைக்குக் கொண்டு செல்லும். உடலையும் மனதையும் தளர்த்தி. ஆற்றலை சேமிக்கச் செய்கின்றது. இந்த மந்திரத்தை உச்சரிப்பதால் உடலுக்கு அதிகளவான ஒட்சிசன் கிடைப்பதோடு ரத்த ஓட்டமும் சீராகி இதயமும் செரிமானமண்டலமும் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவுகிறது.

அல்வாயூர் சிவ .கணேசன்

# காத்தவராயரென்ற நாமம் பூண்டவனே

**பல்லவி**

தொன்றுதொட்டு விளக்கேற்றித் துதிக்கின்றோம் - எம்மை
காத்தருள வேண்டியுனை பணிகின்றோம்!
- தொன்று தொட்டே

**அனுபல்லவி**

அன்று முதல் இன்று வரை ஆதரித்தே - நாளும்
அனுக்கிரகப் பலன் பெற்றோம் தோத்தரித்தே!
- தொன்று தொட்டு

**சரணங்கள்**

காவலனாய் இருந்து நீயும் காட்சி தந்தாய்! -பாரில்
காத்தவ ராயரென்ற நாமம் பூண்டாய்
காரை நிறை பற்றைகளை அழித்துனக்கு பெரும்
கோயில்கட்டி திருவிழாவும் செய்கின்றோமே
- தொன்று தொட்டு

வெடிகொழுத்த சித்திகளைத் தருவதனால் - உன்னை
வெடிக்காத்தான் என்றழைத்து மகிழ்கின்றோம்
உடனுறையும் வரசித்தி விநாயகனை - இணைத்தே
வளம்பலவும் திருப்பணியாய் தருகின்றோம்
- தொன்று தொட்டு

இரவினிலே சஞ்சரித்து வருபவனே! -நல்ல
சகுனங்கள் பல காட்டி மறைபவனே!
வரம் பலவும் எமக்கருளாய்த் தருபவனே - சொல்லும்
வார்த்தைகளை நிறைவாக்கும் காரணனே!
- தொன்று தொட்டு

# மனித விழுமியங்களை மேம்படுத்தும் இறைபக்தி

வாழ்வியல் நோக்கிலான மனித விழுமியங்களை மேம்படுத்தும் சக்தி இறைபக்திக்கு உண்டு. உலகில் வாழ்ந்த ஞானிகளும், மகான்களும், பெரியோர்களும் இதனை மெய்ப்பித்துள்ளனர். இது அசைக்கமுடியாத உண்மையுமாகிறது. தன்னலம் குன்றச் செய்து பிறர் நலனை விரிவுபடுத்தும் இறைபக்தியினாலே சமூகம் நன்மையடையும். உலகம் உய்வு பெறும்.

இறைபக்தியானது தனிமனித, சமூக ஆன்மீக ஒழுக்க, கலாசாரம் சார்ந்த விழுமியங்களை வளம்படுத்த உதவுகிறது. அன்பு, அடக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை, ஏற்றுக்கொள்ளல், விட்டுக் கொடுத்தல், உண்மை, நேர்மை மற்றும் ஏனையவரை மதித்தல் முதலியவை அத்தியாவசியமான மனித விழுமியங்களாகின்றன. நாளாந்த வாழ்க்கையில் திருப்தி கொள்வதற்கும் முன்னேற்றங்களை மதிப்பிடுவதற்கும், நமது சிந்தனைகளையும், செயல்களையும் வடிவமைப்பதற்கும் விழுமியங்கள் துணை புரிகின்றன.

இறைவன் மீதான மனித பக்திக்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று உலகியல் வாழ்க்கையில் இன்பங்களை அனுபவிப்பதாகும் மற்றையது உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து, இன்ப துன்பங்களிலிருந்து விடுபட்டு பேரின்ப நிலையை அடைதலாகும். இந்த இரண்டு நோக்கங்களும், விழுமியங்கள் சார்ந்து அமையும் போது நன்மைகள் உண்டாகும் என்பதில் தவறில்லை. இறைபக்தி வலுவடையும்போது மனம் ஒருநிலைப்படும், உள்ளத்தில் உண்மை யொளி உண்டாகும். சிந்தனையிலும் வாக்கிலும் தெளிவுண்டாகும். அன்பு, அறம் போன்ற பண்புகள் மிகுதியாகும். பொது நலம் பிறக்கும். சமூகத்தில் ஒருவர் ஏற்புடையதான வாழ்க்கை வாழ்வ தற்கும் வாய்ப்பு களைச் சீரமைப்பதற்குப் பயனுடைய அனுபவங்களை மேலோங்கச் செய்யவும் இறைபக்தியுடன்கூடிய விழுமியங்கள்வழிகோலும்.

இறை பக்தி உண்மையை உணர்த்தும் இயல்புடையது. மனித விழுமியங்கள் சார்ந்த குணவியல்புகளின் யதார்த்தங்களை விளங்கும் ஆற்றலுக்கு உள்ளத்தில் தெளிவு இருத்தல் வேண்டும் என்பதை இந்துமதக் கோட்பாடுகள் எடுத்துக்காட்டியுள்ளன. மாசிலாநிலை பக்தியை மேலும் வலுவடையச் செய்யும். இறைவன் மீது நாங்கள் கொண்டிருக்கும் அன்பு சமூகத்தின்பால் அன்பும், அக்கறையும் ஈடுபாடும் உண்டாவதால் சேவைமனப்பான்மை மேலோங்கும்.

மனிதனின் உணர்வுகள் நிதானம் அடைவதற்குப் பக்தியே சிறந்தவழி. அதுவே மனதிற்குச் சக்தி தருவதாகவும் இருக்கும். இறைபக்திமூலம் மனம் ஒரு நிலைப்படும்போது மனவெழுச்சிகள் நிதானமடைகின்றன. கோபம், பகை, வெறுப்புப் போன்ற உணர்ச்சிகள் மறைந்து மற்றவர் மீது நேர்நிலை எண்ணங்கள் தோன்றும் போது எமது நடத்தையிலும் சீராக்கங்கள் உண்டாகும்.

இறைபக்தி சமூகத்தை இணைக்கிறது; மற்றவர் நடந்து கொள்ள வேண்டிய பண்புகளை விருத்தி செய்கிறது. இதன் காரணமாகவே சைவ சமயத்தில் கூட்டு வழிபாடு வலியுறுத்தப் பட்டுள்ளது. மனிதன் கூட்டாகச் செயற்படுவதால் உண்டாகும் விளைவுகள் ஏற்புடையவாக மாறுவதற்கும்; மற்றவர்களால் பின் பற்றப்படுவதற்கும் வழிபிறக்கின்றது.

பக்தி என்பது மனவுறுதியை வெளிப்படுத்தும் செயலாகும். நாம் எண்ணியவற்றை எண்ணியவாறு அடைவதற்கு வழிகோலும் இயல்பு மனவுறுதியாகும். பக்தியின் விளைவான அமைதி மனதினூ டாகப் பாய்ந்து பரவும்போது மனதில் நல்ல சிந்தனைகள் பிறக் கின்றன. மனம் எந்த விடயத்தில் கூடுதலான கவனம் செலுத்துகிறதோ அவை எம்மீது பதிந்து அவற்றை அடையச் செய்து விடும். நல்லவற்றைச் சிந்தித்தால் நல்லவை நடக்கும் என்பதுபோல, நாம் மனரீதியாக இறைவனில் உண்மையான பக்தியை செலுத்தும் போது, உன்னதமான முறையில் பிறருக்குச் சேவை செய்யும் மனப்பக்குவமும் விருப்பமும் உண்டாகும்.இறைபக்தி தியாகத்தை வெளிப்படுத்த வல்லது. தியாகம், விழுமியங்களுள் உயர்ந்தது. பக்தி வலுப்பெறும் போது பிறரிடத்தில் உண்டாகும் மரியாதையும் அன்பும் தோற்று விக்கும் என்பதைச் சைவ சமய நாயன்மார்களின் தொண்டுகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவர்களுடைய தொண்டுகள் அவர்களுடைய முக்திப்பேறுக்காக மட்டும் அமைந்தவையல்ல. அவர்களுடைய பக்தியால் உலகம் உய்ந்தது; உயர்வு பெற்றுள்ளது.

பக்தி செய்பவன் பிறருக்காக வாழ்பவன், இல் வாழ்க்கையின் பண்பாகத் திருவள்ளுவர் கூறும் உண்மையான விழுமியமும் இதுவே. தானும் வாழ்ந்து கொண்டு பிறரையும் வாழ வைப்பதுதான் இல்லறம். இல்லறம் தழைக்கப் பக்தி வேண்டும். உலகு சார்ந்த நோக்கினை விரிவுபடுத்தும் இறைபக்தி என்பது ஒருவன் தன்னை அறிந்து கொள்வதற்கான வழியாகும். "தன்னை அறிந்தவனே தலைவனை அறிவான்" என்பது ஞானியர்" வாக்கு. அவனே மற்றவர் துன்பத்தைப் போக்குவதற்கு உழைக்கும் ஆற்றலையும் பெற்றுக் கொள்வான்.

பிள்ளைகள், இளையோர், வளர்ந்தோர் மற்றும் பெரியோர் மத்தியில் உண்மை விளக்கங்களுடன் கூடிய இறைபக்தியை விருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் வாயிலாக உணர்ந்த மனித மற்றும் சமூக விழுமியங்களைப் பேணும் சமூகத்தை ஆலயங்கள் கட்டியெழுப்புதல் அத்தியாவசியமானது.

## விநாயகர் அவதாரம் கதை

ஒருமுறை சிவபெருமான் வெளியே சென்றிருந்த சமயம் பார்வதிதேவி நீராடச்சென்றார். அப்போது தனக்கு காவல்காக்க ஒருவரும் இல்லையென்பதால், தனது நீராட்டுக்காக வைக்கப்பட்டிருந்த சந்தனக் குழம்பை எடுத்து ஒரு உருவம் உருவாக்கி அனுக்கிரகத்தால் அதற்கு உயிரூட்டினார். அவரால் உயிரூட்டப்பட்டதால் அவ்வுருவம் அவரது பிள்ளை ஆகிவிட்டது.

எவரையும் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாதெனப் பிள்ளையாருக்கு அறிவுறுத்தி விட்டு பார்வதி தேவியார் நீராடச் சென்று விட்டார். அச்சமயம் அங்கு வந்த சிவபெருமானைப் பிள்ளையார் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால் கோபம் கொண்ட சிவன் பிள்ளையாரின் தலையை வெட்டி விட்டு உள்ளே சென்று விட்டார். நீராடி முடிந்ததும் தேவியார் வெளியே வந்து பிள்ளையார், தலை இல்லாமல் கிடந்த கோலத்தைக் கண்டு கோபமும், ஆவேசமும் கொண்டார். தான் உருவாக்கிய பிள்ளையாரைச் சிவனே சிதைத்து விட்டதை அறிந்த அவர் காளியாக மாறி உருவம் எடுத்து வெளியேறி மூவுலகிலும் தமது கண்ணில் பட்ட சகலவற்றையும் அழிக்கத் தொடங்கினார்.

காளியின் ஆவேச நர்த்தனத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டனர். காளியைச் சாந்தப்படுத்துவதற்கு முடிவு செய்த சிவன், தனது கணங்களை அழைத்து வட திசையாகச் சென்று முதலில் தென்படுகின்ற ஜீவராசியின் தலையைக் வெட்டி வருமாறு பணித்தார். அதன்படி கணங்கள் வடதிசை நோக்கிச் சென்ற பொழுது அவர்களுக்கு ஒரு யானையே முதலில் தென்பட்டது. அவர்கள் அதன் தலையை வெட்டி எடுத்துச் சென்று இறைவனிடம் கொடுத்தனர். அவர் அத்தலையை வெட்டுண்டு கிடந்த பிள்ளையாரின் முண்டத்தில் வைத்து உயிரூட்டி விட்டார். இதைக் கண்டு சாந்தமடைந்த தேவியார் அகமகிழ்ந்து பிள்ளையாரைக் கட்டி அணைத்துக் கொண்டார். சிவன் அந்தப் பிள்ளையாருக்கு "கணேசன்" என நாமம் சூட்டித் தமது கணங்களுக்கு தலைவராக நியமித்தார் என "நாரதபுராணத்தில்" தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவே பிள்ளையாரின் அவதார கதையாகும்.

ஜெயபாரதி கௌசிகன்

# காத்த வராயா எம்மைக் காத்திடு ராஜா

சிவ தவத்தில் வந்தவனே நீயையா
சிவன் மகனே காத்தவராயா
தவமெமக்கு நீ தானே ஐயா எம்
மனமெல்லாம் பூத்திடு ராஜா
(சிவ தவத்தில்)

ஆரியப்பூ மாலையினை மணந்தவனும் நீயையா
யாரும் இல்லா எங்கள் நிலை உணர்ந்தவனும் நீயையா
பாரினிலே படும் இடர்கள் மனங்கொள்ளாத் துயரய்யா
பரிமேலே ஏறிவந்து படுமின்னல் தீரையா
காத்த வராயா எம்மைக்
காத்திடு ராஜா
(சிவ தவத்தில்)

மேவுமெழிற் பதியினிலே நீயிருக்கும் வரையினிலே
பூவினிதழ் போலெங்கள் மனசிருக்கும் மகிழ்வினிலே
ஆவினங்கள் ஆடி நிற்கும் ஆலடியான் நிழலினிலே
எந்த ஒரு ஜீவனுக்கும் துன்பமில்லை ஊரினிலே
காத்தவராயா எம்மைக்
காத்திடு ராஜா
(சிவ தவத்தில்)



விஜயநாதன் செந்தூரன்

# இந்து சமய வழிபாடும் அறிவியல் உண்மைகளும்

ஒரு மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி சமைத்துக் கொடுக்கும் இந்துமதமானது சில தனித்துவமான இந்து பண்பாட்டு அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் வழிபாடும் ஒன்றாகும். இந்து என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் சமூகம் பரம்பரை பரம்பரையாக பின்பற்றி வருகின்ற பண்பாட்டுக் கூறுகளில் வழிபாடே தலையாயது.

இந்துக்களிடம் அறிவியல் அறிவு இருந்துள்ளது என்பதை அவர்கள் வகுத்து வைத்திருக்கும் ஒவ்வொரு வழிபாடும் உணர்த்து கிறது. கடவுளை பக்தியுடன் வழிபடுதலை ஆன்மீகமாக பார்க்காமல் அறிவியலாக பார்க்கின்றபோது இந்து சமய வழிபாட்டிற்குள் விஞ்ஞானம் இரண்டறக் கலந்திருப்பதை உணர முடியும்.

கோயில்களின் மையப்பகுதியில் அதாவது மூலஸ்தானம் அல்லது கருவறையில் உள்ள மூலவரின் சிலையில் அதிகளவு காந்த அலைகள் பிரவாகித்திருக்கும். மேலும் மூலவருக்கு முன்னதாக தாமரைத் தட்டுக்கள் வைக்கப்பட்டிருக்கும். இத்தட்டுக்கள் பூமியின் காந்த அலைகளை உறிஞ்சி ஆலய சுற்றுப்புறத்திலும் பரவச்செய்வ தோடு எமது உடலுக்கு தேவையான நேர்மறை திறன்களை அதிகரிக்கச் செய்யும்.

அதுமட்டுமல்லாது இந்த காந்த அலைகளை வெளியே செல்லாமல் இருக்க மூலஸ்தானம் மூன்றுபக்கமும் மூடியதாகவே இருக்கும். பக்தர்கள் இறைவனை தரிசனம் செய்யும் போது நேரடியாகவே இந்த அலைகள் பக்தர்களின் உடலில் பரவும்.

கோயில் மணி அடித்து வழிபடுதலில், கோயில் மணியானது கேட்னீயம், ஜீன்க், ஈயம், தாமிரம், நிக்கல், குரோனியம் மற்றும் மக்னீசியம் போன்ற உலோகக்கலவைகளால் ஆனது. இந்த மணியில்

இருந்து வரும் அதிரொலி உடலில் உள்ள ஏழு சக்கரங்களையும் (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தம், ஆக்கினை, சகஸ்ராநம) தொடும். மணி ஒலிக்கப்பட்டதன் பின் சிலநேரம் மூளை அமைதியாக மாறி ஒருமுக நிலையை அடையும். ஒரு மன நிலையடைவதால் மூளையின் அறிவாற்றல் தன்மையும் உணர்வு திறனும் தீவிரமடையும்.

கோயில்களில் உள்ள விக்கிரகங்களை தண்ணீர், துளசி, குங்குமப்பூ, கற்பூரம், ஏலக்காய், கராம்பு, சேர்ந்த ஒருவகையான கலவையால் அபிசேகிக்கப்பட்டு பின் பக்தர்களுக்கு வழங்கப்படும். இந்தக்கலவையால் அபிஷேகம் செய்யும் போது இவை காந்த அலைகளை உள்வாங்கி இவற்றின் மருத்துவக் குணங்களை மேலும் அதிகரிக்கும். இவற்றை பருகுவதால் உடல் உறுப்புக்கள் நோய் எதிர்ப்புச் சக்தியினை பெற்றுக் கொள்கின்றன.

சங்கு ஊதி வழிபடுவதன் மூலம் மூலாதார செயலகம் நன்றாக செயற்படும். மேலும் இது மூச்சை சீராக்குவதோடு நுரையீரலின் செயற்பாட்டிற்கும் உதவி புரிகின்றது. சங்குகளில் இருந்து வெளியேறும் காற்று கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது.

கோயிலுக்கு சென்றுகைகூப்பி வணங்குவதால் மனம் புத்துணர்ச்சியும் அமைதியும் அடையும். இம்முறை யோகாசனத்தில் அஞ்சலி முத்ரா என அழைக்கப்படுகிறது. மஞ்சள், எலுமிச்சை, மேக்குரி என்ற வேதிப்பொருட்களை கொண்டு தயார் செய்யப்படும் குங்குமத்தை நெற்றியினில் வைப்பதனால் இரத்த அழுத்தம் குறைவடையும்.

இவ்வாறான இந்து சமய வழிபாடுகளில் இன்னமும் திருநீறு அணிதல், சந்தனம் தரித்தல், துளசிமாட வழிபாடு, கோபுர வழிபாடு, அரசமர வழிபாடு, அட்டாங்க பஞ்சாங்க நமஸ்கார வழிபாடு, விரத வழிபாடு, மார்கழி மாத வழிபாடு, சூரிய நமஸ்காரம் மற்றும் உருத்திராக்கம் அணிதல் என்ற ஒவ்வொரு வழிபாட்டிற்கும் ஒவ்வொரு அறிவியல் சார் உண்மைகள் பொதிந்துள்ளன. இவை சார்ந்த தேடல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் தேடல் செய்து சிற்ந்ததொரு விரிவான தொகுப்பாக நோக்கின் இந்துக்களே விஞ்ஞானத்தின் முன்னோடிகள் என்ற ஆய்வை நிலை நிறுத்துவதற்கு சான்று பகர்வனவாக இருக்கும்.

வெற்றி துஷ்யந்தன்

# வரமருளும் வரசித்தியான்

பல்லவி

வர வர வரம் தரும் வர சித்தி நாயகா
இக பர சுகம் அருளும் சிவ சக்தி பாலகா

மனமெல்லாம் நீதானே மன்னவனே நீயப்பா
மண்ணுயிர்க்கு முதல்வோனாய் வாய்தவனும் நீயப்பா

அல்வையூரின் எல்லைநாடி கால்கள் நாளும் ஓடுது
தொல்லை நீக்கும் உந்தன் வாசலை மனங்கள் என்றும் நாடுது

சரணம்

கலிதீர வழிசொல்லும் காத்தவ ராஜனே
பிணிதீர வழிசொல்வாய் காத்திடும் நாதனே
விளக்கு வைக்கும் நேரமெல்லாம் வேண்டுவதை தருவாய்
இலக்கு வைத்து கேட்பதெல்லாம் இயக்கிநின்று வருவாய்
தலைமுறையாய் கோயில் கொண்ட கலைமகனும் நீயே
இலைமறையாய் உள்ளவர்கும் இஷ்டதெய்வத் தீயே

கோரஸ்

சித்தம் யாவும் நிறைகிறான் சித்தி விநாயகன்
நித்தம் எம்மை காப்பான் நித்திலத்து முதல்வன்

சரணம்

உத்தரங்கள் கண்டவன் உற்சவங்கள் காண்கிறான்
உற்றவனாய் நின்றெம்மை உள்ளொளியாய் காக்கிறான்
கால காலமாக நீயும் சூலமாகி நின்றாய்
கோல அழகுசூழ இன்று கோயில்கொண்டு வந்தாய்
உளமுறையும் உன்னதனே உடனுறைந்து நிற்கின்றாய்
உயிர்வரைக்கும் காப்பவனே ஊரைக்காத்து நிறைகின்றாய்

கோரஸ்

பலகாலக் கனவு பலித்திட அருள் செய்தான் -காத்தான்
பலமாகி நின்று இனித்திடும் வாழ்வு காப்பான்

# கருட புராணம் கூறும் பாவங்களுக்கான நரகங்கள்

மனித வாழ்வில் பிறப்பு இறப்பு தவிர்க்கப்பட முடியாத ஒன்று. இந்து சமயத்தில் மறுபிறவிக் கோட்பாடு பிரதானமான ஒன்றாக அமைந்து காணப்படுகின்றது. பொதுவாகவே இறப்பின் பின்னரான நிலை பற்றி பலர் பலவாறு கூறுவர். மாணிக்கவாசகர் சுவாமிகள் சிவபுராணத்தில் பிறவிநிலை பற்றி வருமாறு கூறுகின்றார்.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்"

என உயிர்களின் பிறவிநிலை பற்றி குறிப்பிடுகின்றார். இந்நிலையில்தான் இறப்பின் பின்னரான பிறவி மற்றும் உயிர்களின் நிலை பற்றிய தேடலின் பயனாய் படிக்கத்துாண்டிய ஒரு நூலே கருட புராணம் ஆகும். இவ்வாறான கருட புராணம் பற்றிய தேடலின் விளை வாய் இணையம், புத்தகங்கள் என்பவற்றில் இருந்து திரட்டிய தகவல் கள் பற்றிய சில பகுதிகளை இக்கட்டுரை தொட்டுச் செல்கின்றது.

வேதவியாசர் அருளிய பதினெண் புராணங்களில் ஒன்றாக காணப்படும் கருடபுராணமானது ஒரு விஸ்ணு புராணமாகும். திருமால் கருடனுக்கு உபதேசம் செய்த நிலையில் கருடன் கேட்ட புராணமாத லால் இதுவும் கருட புராணம் எனப்பெயர் பெறலாயிற்று.

கருட புராணத்தில் பிறப்பு, இறப்பு, தானம், தவம், சடங்கு, மறுபிறப்பு, சொர்க்கம், நரகம் என்பன பற்றிய விடயங்கள் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. மானிடப்பிறவியில் ஒருவன் செய் கின்ற தான தர்மங்களும் அவனது நற்செயற்பாடுகளுமே அவனது மோட்சத்திற்கான வழிகளாகவும் பகவான் குறிப்பிட்டுள்ளார். மேலும் தானங்கள் செய்யும் போது மனத்தூய்மையுடன் செய்ய

வேண்டும் எனவும் தானங்களை செய்பவரும் பெறுபவரும் மனத்தூய்மை உடையவர்களாக இருக்கும்போதே செய்யும் தானத்தின் நற்பயன் கிடைக்கும் எனவும் சொல்லப்படுகின்றது.

மேலும் உயிர்கள் இறப்பின் பின்னரான நிலையில் சுவர்க்கம் நரகம் என்பனவற்றிற்கு செல்லும் நிலைபற்றி குறிப்பிடுகின்றது. குறிப்பாக கருடன் பகவான் ஸ்ரீகிருஸ்ணரை நோக்கி நரகங்கள் என்பவை யாவை? அவை எவ்வாறு இருக்கின்றன? அவற்றில் யார் யார் தண்டிக்கப்படுவார்கள் என்று வினவிய போது,

பகவான் கருடனை நோக்கி காசிப புத்திரனே காலதேவனால் நிச்சயிக்கப்பட்ட தீர்வாய் நரகங்கள் எண்பத்தினான்கு இலட்சம் இருக்கின்றன. அவற்றில் மிகவும் கொடிய நரகங்கள் 28 உள்ளன எனக் குறிப்பிடுகின்றார். அத்தகைய 28 நரகங்கள் எவை எனப்பார்ப்போம்.

1. பிறன் மனைவி, குழந்தை, பொருள் என்பவற்றை கொள்ளையடிப்போர் அடையும் நரகம் தாமிஸிர (தாமிரை) நரகம் ஆகும்.
2. கணவன் அல்லது மனைவியை வஞ்சித்து வாழ்வோர் அடையும் நரகம் அநித்தாஸ்ர நரகம் ஆகும்.
3. அக்கிரகமாக பிறருடைய குடும்பங்களை அழித்து பலவந்தமாக பொருள்களை பறிக்கும் சுயநலக்காரர் அடைவது ரௌரவ நரகமாகும்.
4. குரு எனும் ஒருவகையான அகோர மான்கள் பாவிகளைச் சூழ்ந்து துன்புறுத்தும் நரகம் மஹா ரௌரவம் ஆகும்.
5. தன் சுவைக்காக பிற உயிர்களைத் துன்புறுத்துவோர் அடையும் நரகம் கும்பீபாகம் ஆகும்.
6. பெற்றோர் மற்றும் பெரியோரை துன்புறுத்துவோர் அடையும் நரகம் காலச்சூத்திரம் ஆகும்.
7. தெய்வங்களை நிந்தித்து தன் தர்மங்களை விடுத்தோர் அடையும் நரகம் அசபத்திரம் ஆகும்.
8. அநியாயமாக பிறரைத் தண்டித்து அகந்தையுடன் அநீதிகளும் கொடுமைகளும் புரிபவர்கள் அடையும் நரகம் பன்றிமுகம் ஆகும்.
9. சித்திரவதை, கொலை, துரோகம் புரிபவர்கள் அடையும் நரகம் அந்த கூபம் ஆகும்.
10. தான் மட்டும் உண்டு பிறரைத்துளைக்கும் கிருமி போல வாழ்பவர்கள் அடையும் நரகம் கிருமி போஜனம் ஆகும்.

11. பிறரது உரிமைகளையும் உடமைகளையும் தனது வலிமையால் பலாத்காரம் செய்து பறிப்பவர்கள் அடையும் நரகம் அக்னி குண்டம் ஆகும்.
12. கூடத்தகாத ஆணை அல்லது பெண்ணை கட்டித்தழுவி கூடி மகிழும் காம மோக வெறியர்கள் அடையும் நரகம் வஜ்ர(வக்ர) கண்டகம் ஆகும்.
13. நன்மை தீமை உயர்வு தாழ்வு பாராமல் தரங்கெட்டு எல்லோருடனும் கூடிவாழும் மோகாந்தகாரப் பாவிகள் அடையும் நரகம் சான்மலி ஆகும்.
14. அதிகார வெறியாலோ கபட வேஷத்தாலோ நயவஞ்சகம் செய்யும் அதர்மிகள் அடையும் நரகம் வைதரணி ஆகும்.
15. ஒழுங்கின்றி இழிமகளைக் கூடி இலட்சியமின்றி விலங்குகள் போலதிரபவர்கள் அடையும் நரகம் பூபோதம் ஆகும்.
16. பிராணிகளை துன்புறுத்தி கொலை புரிபவர்கள் அடையும் நரகம் பிராண(ணி)ரோதம் ஆகும்.
17. டம்பத்திற்காக பசுவதை புரிந்து யாகம் புரியும் பித்தலாட்டக்காரர்கள் அடையும் நரகம் விசஸனம் ஆகும்.
18. இல்லாளை வற்புறுத்தி விபரீத மோக இச்சைக்கு உட்படுத்துவோர் அடையும் நரகம் லாலா பசஷம் ஆகும்.
19. வீடுகளுக்கு தீ வைத்தல், சூறையாடல், ஜீவ வதை புரிதல், விஷமூட்டடல், குடிமக்களை கொல்வது போன்ற துன்புறுத் தல்கள் புரிவோர் அடையும் நரகம் சாரமேயாதனம் ஆகும்.
20. பொய்ச் சாட்சிகள் கூறுதல் போன்ற அகம்பாவங்கள் கொண்டவர்கள் அடையும் நரகம் அவீசி ஆகும்.
21. மது போதை பொருட்களை கொடுத்தும் குடித்தும் குடி களைக் கெடுக்கும் குடிகேடர்கள் அடையும் நரகம் பரிபாதளம் ஆகும்.
22. தானே பெரியவன் எனும் அகம்பாவம் கொண்டு பெரியோரை நல்லவர்களையும் மதிக்காதவர்கள் அடையும் நரகம் கஷாரகர்த்தமம் ஆகும்.
23. நரமேத யாகம் புரிதல், நரமாமிசம் உண்ணல், பிராணிகள் போன்ற வற்றை வதைப்பவர்கள் அடையும் நரகம் ரகோஷாகனம் ஆகும்.
24. தற்கொலை, நயவஞ்சகக் கொலை, நம்பிக்கைத்துரோகம் புரிபவர்கள் அடையும் நரகம் சூலரோதம் ஆகும்.

25. தீமை புரிந்த தீயோர் அடையும் நரகம் தந்த சூகம் ஆகும்.
26. உயிர்க்கொலை புரிபவர்கள், பிராணிகளை கொடூர வதை புரியும் கொடூரர்கள் அடையும் நரகம் வடாரோத(க)ம் ஆகும்.
27. விருந்தினரை வெறுத்த உலோபிகளான சுயநலவாதிகள் அடையும் நரகம் பர்வா(ரியா)வர்த்தகம் ஆகும்.
28. செல்வம் செல்வாக்கால் அநியாயமாக பொருளீட்டல், பதுக்கி வைத்தல் போன்ற பாவம் செய்வோர் அடையும் நரகம் சூசிமுகம் ஆகும்.

இவ் 28 வகை நரகங்களும் ஒவ்வொரு வகையிலும் ஏராள மான மிகக் கொடியவையாக அமையும் என்பதுடன் கருட புராணத் தில் இந்நரகங்களில் கொடுக்கப்படும் தண்டனைகள் பற்றியும் விரித்துக்கூறப்பட்டுள்ளது.

உயிர்கள் செய்யும் பாவம் புண்ணியங்களை கணக்கிட்டு எம தர்மராஜனுக்கு அறிவிப்பவன் சித்திர குப்தன் எனவும் இவன் சித்திரா பௌர்ணமி தினத்தில் பிறந்ததனால் இப்பெயர் பெற்றதாகவும் குறிப்பிடப்படுகின்றது. சித்திர குப்தன் சீவன்கள் பூலோகத்தில் செய்த பாவ புண்ணியங்களை பன்னிரு சிரவணர்கள் மூலமே அறிந்து கணக்கிட்டு யம லோகத்தில் யமனிடம் அறிவிக்கின்றான் எனவும் கருட புராணம் விரித்துக் கூறுகின்றது. சித்திர குப்தன் குள்ளமான வடிவம் கொண்டு வலது கையில் எழுத்தாணியும் இடது கையில் ஒரு ஏட்டையும் தாங்கி வலது காலை ஊன்றிய படியும் இடது காலை மடித்து அமர்ந்தபடியும் காட்சி தருவார். சித்திரா பௌர்ணமி நாளில் இவரை உருகி வழிபடுவதன் மூலமும் செய்த பாவங்களுக்கு தகுந்த பரிகாரம் செய்வதன் மூலமும் பாவங்களே செய்யாமல் இருப்பதன் மூலமும் இவரது அருளினை இலகுவில் பெறமுடியும்.

உலகிலேயே சித்திர குப்தனுக்கு ஒரு சிறிய கோயில் இந்தியாவின் காஞ்சிபுரத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் அருள் மிகு சித்திர குப்த சுவாமி கோவில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே மானிடர்களாகிய நாம் பிறவிப் பெருங்கடலை நீந்தியே இறைவனடி சேர வேண்டியவர்களாக உள்ளோம். எனவே இயன்ற அளவு பாவங்கள் செய்வனவற்றை தவிர்த்து கருட புராணத்திலே பகவான் ஸ்ரீகிருஸ்ணன் சொன்னது போல தான தருமங்களை மேற்கொண்டு மறுமைக்காலத்தில் இறைவன் திருவடி களை அடைந்து பிறவிகள் நீங்கிய பேரின்பப் பெருவாழ்வினை அடைய வேண்டியதே பிறவிக் கோட்பாட்டின் பயனாகும்.

புதுவை செ.சோ.வராகி

# வரசித்தி விநாயகா

வங்கக் கடல் அலை வந்து
பாடுதிங்கு சிந்து
வரசித்தி விநாயகரின்
வரங்களைக் கண்டு...

அந்தக்கடல் அலை முந்தும்
அல்வாயூரின் பதியினில்
ஆனந்தமே பொங்கும்

வங்கக் கடல் அலை வந்து
பாடுதிங்கு சிந்து
வரசித்தி விநாயகரின்
வரங்களைக் கண்டு...

ஆயகலை தனை இங்கு
காத்திடும் ராஜன் - எங்கள்
காத்தவராஜன்...

கருணை தனைக் கண்டு - இங்கு
முந்திவரும் அடியவரின்
முந்தை வினை அறுப்பவ

நம்பி வரும் அடியவர்க்கு
நல்வழியைக் கொடுப்பவ

வங்கக்கடல் அலை வந்து
பாடு திங்கு சிந்து
வரசித்தி விநாயகரின்
வரங்களைக் கண்டு...

கல்வி வளமுடன் கனதன
செல்வமும்
காரிருளின் முகிலாய் கன மழை
எனவே...

உனதடி வந்திங்கே தினம்
உனைத் தொழுதால்...

உடலுறும் பிணியறும்
உயர்ச்சியும் தருவாய்

வங்கக்கடல் அலை வந்து
பாடுதிங்கு சிந்து
வரசித்தி விநாயகரின்
வரங்களைக் கண்டு...

ஆவணித் திங்களிலே உன்
பதியின் வாசலிலே...

பக்தர் கூட்டம் கூடுகையில்
உன் பவனி பார்க்கையிலே

எங்கள் துயர் யாவும் அங்கே
எமை விட்டுத்
தொலைந்தோடயிலே

முந்தை வினை அகலயிலே
முக்தி நிலை கொடுப்பவ

வங்கக் கடல் அலை வந்து
பாடு திங்கு சிந்து
வரசித்தி விநாயகரின்
வரங்களைக் கண்டு...

வங்கக்கடல் அலைவந்து
பாடுதிங்கு சிந்து...
அந்தக்கடல் அலை முந்தும்
அல்வாயூரின் பதியினில்
ஆனந்தமே பொங்கும்...

# சிவ சின்னங்களில் விபூதியின் மகத்துவம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவசமயம் ஆகும். சிவபெருமானை வழிபடுபவர்கள் சைவசமயிகள் என அழைக்கப்படுகின்றனர். சைவசமயிகள் அனைவராலும் நெற்றியில் இடப்படும் புனித அடையாளம் விபூதி ஆகும். விபூதி என்பது தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுத்தல் என்பதாகும். ஞானம் எனும் நெருப்பில் அனைத்தும் சுட்டெரிக்கப்பட்டபின் எஞ்சுவது பரிசுத்தமான சிவதத்துவமே என்பதனை விபூதி குறிக்கிறது. விபூதியானது எமது அஞ்ஞானத்தைப் போக்கி, தீமைகளினின்றும் எம்மை பாதுகாத்து இறைவனையும் அவனது பெருங் கருணையையும் நினைவூட்டும் சாதனமாக விளங்குகின்றது. உலகில் யார் எத்தகையினராக இருந்தாலும் மரணத்திற்குப் பின் இறுதியில் தீயில் வெந்து ஒரு பிடி சாம்பலாகத்தான் ஆக வேண்டும் என்பதை விபூதி குறிக்கிறது. விபூதியை நெற்றியில் இடும் போதெல்லாம் இந்த உடல் ஒரு நாள் தீயில் வெந்து சாம்பலாகும் எனும் தத்துவத்தினை உணர்த்துகின்றது. நாமும் இது போலத்தான் அகங்கார ஆணவமின்றி அடக்கத்துடன் தூய்மையாக, அறநெறியில் இறை சிந்தனையோடு வாழ வேண்டுமென உணர்த்துவதாக கருதப்படுகின்றது.

விபூதியை திருநீறு, பசிதம், பசுமம், இரட்சை, ஷராம் போன்ற பெயர்களாலும் அழைப்பார்கள். வினைகளை நீறாக்குவதனால் "திருநீறு" எனவும் ஒளியைக் கொடுத்ததினால் "பசிதம்" எனவும் பாவங்களை எரித்து நீறாக்குவதனால் "பசுமம்" எனவும் தன்னைத் தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் காப்பதனால் "இரட்சை" எனவும் உயிர்களது மலத்தை நீக்குவதனால் "ஷராம்" எனவும் அழைக்கப்படுகின்றது.

குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினாலே சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது.

வெள்ளை நிறத்திருநீறு அணியத்தக்கதாகும். தூய்மைக்கு அடையாள மாகும். வெள்ளை நிறத்திருநீற்றறை அணிவதனால் எமது அகமும் புறமும் துயஜ்மை அடைகின்றன. இங்கே நீறாக எடுத்துக் கொள்ளும் சாணம் ஆன்மாவையும், சாணத்தில் உள்ள அழுக்குகள் ஆன்மா வோடு உள்ள மலங்களையும், நெருப்பு திருவருளையும் உரிதல் திருவருள் பதிதலையும் எரிந்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கின்றது.

திருநீற்றை உத்தூளனம், திரிபுண்டரம் எனும் இரண்டு முறைகளில் அணி வேண்டும் உத்தூளனம் என்பது பரவிப் பூசுதல் எனபதாகும். திரிபுண்டரம் என்பது திருநீற்றை நீரில் குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதனை குறிக்கும். திரிபுண்டரமாக அணிவதற்குரிய உறுப்புகளாக உச்சி, நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாள்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து எனும் பதினாறு உறுப்புகளாகும்.

திருநீறு அணியும் பொழுது உத்தம திக்குகளான வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல்" வேண்டும். விபூதியை தரிக்கும் போது சிவபெருமானைத் தியானித்து நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லிக் கொண்டு வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். மேலும் திருநீறு தரிக்க வேண்டிய காலங்களாவன காலை, உச்சி, மாலை வேளைகள் மூன்றும் நித்திரைக்கு முன்னும் பின்னும் பல்துலக்கிய உடனும், நீராடிய பின்பும், பூசைக்கு முன்னும் பின்னும், உணவுக்கு முன்னும் பின்னும் தம் கடமைகளைச் செய்ய செல்லும் போதும் திருநீறு அணிதல் வேண்டும்.

திருநீற்றை அணிவதனால் உடற்சுத்தம் ஏற்படும். ஞாபக சக்தி உண்டாக்கும், ஞானத்தை உண்டாக்கும், உயர்ந்த நற்குணங்கள் வளரும், பிறவிப்பணி அறுத்து மோட்சத்திற்கு செல்ல வழிகாட்டும், பாவங்களைப் போக்கும் போன்ற நன்மைகள் கிடைக்கின்றன. ஞானக்கினியாலே சுடப்பட்ட பசுமல நீக்கத்தால் விளங்கும் சிவ தத்துவப் பேற்றின் அறிகுறியே திருநீறாகும். திருநீறு அணிவதனால் முத்தியும் சிவஞானமும் கைகூடுமென ஆகம நூல்கள் கூறுகின்றன. இதனை திருஞான சம்பந்தரது "முத்தி தருவது நீறு" போதந்தருவது நீறு, சித்தி தருவது நீறு, சுந்தரமாவது நீறு, தேசம் புகழ்வது நீறு" எனும் திருவாக்குகளால் யாம் உணரலாம்.

இவ்வாறு சைவசமயத்தில் சிறப்புப் பெறும் சிவசின்னங்களில் ஒன்றான திருநீற்றின் பெருமையால் நாயன்மார்கள் பல அற்புதங்

களை நிகழ்த்தியும் பல பாடல்களையும் பாடியிருக்கிறார்கள். இந்த வகையில் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் "திரு ஆலவாய் திருநீற்றுப் பதிகம்" எனும் அற்புதப் பாசுரத்தை திருவாய் மலர்ந்து அருளியுள்ளார்கள். திருநாவுக்கரசர் "பவளம் போல் மேனியில் பல் வெண்ணீறு" என்று பாடி சிவபெருமான் திருநீறு அணிந்திருந்ததை உணர்த்தினார். மாணிக்க வாசகப் பெருமான் "வெண்ணீற்றான்" என்று சிவனைக் குறிப்பிடுகின்றார். திருமூலர் "கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை மங்காமல் பூசி மகிழ்வரே" என்று திருநீற்றின் பெருமை பற்றி பாடியிருக்கிறார். மேலும் ஔவைப்பிராட்டி "நீறு இல்லா நெற்றி பாழ்" என்று திருநீற்றின் பெருமை பற்றி பாடியுள்ளார். திருஞான சம்பந்தர் "வானவர் மேலது நீறு" என்றும் "மேலுறைத் தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு" என்றும் பாடி தேவர்கள் திருநிறு அணிந்திருத்தலை கூறியிருக்கிறார். "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளம் கவர் கள்வன்" என்று பாடி சிவபெருமான் திருநீறு அணிந்திருத்தலைக் கூறினார். திருநீற்றின் மகிமை திருஞான சம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகத்தில் விரிவாகவும் மற்றையோர் பாடல்களில் பரவலாகவும் கூறப்பட்டுள்ளன. திருஞான சம்பந்தர் திருநீற்றின் பெருமை பற்றி,

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திரு ஆலவாயான் திருநீறே"

எனப் பாடியுள்ளார்.

எனவே இவ்வாறு சைவசமயத்தில் சிவசின்னங்களில் ஒன்றாக சிறப்புப்பெறும் திருநீறானது அனைவரது அஞ்ஞானத்தை போக்கி தீமைகளினின்றும் எம்மை பாதுகாத்து இறைவனிடத்து கொண்டு போய் சேர்ப்பதனால் நீராடியவுடனும், பூசை வழிபாடுகள் செய்யும் நேரங்களிலும் இவற்றை நாடோறும் பக்தி சிரத்தையுடன் அனைவரும் தரித்து பயன்பெறுவோமாக.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

கலாநிதி த.கலாமணி

# காத்தவனே வருக!

எடுப்பு

காத்தானே எங்கள் காத்தானே
வாருமையா அருள் தாருமையா

முடுகு

சூலம் ஏந்தி மழுவும் ஏந்தி கூரியநேர் வாளும் தாங்கி
தூலமான கோலம் கொண்டு பூதலத்தில் காவல் செய்ய
(காத்தானே)

தொடுப்பு

முத்துமாரி அம்மையின் மனம் நிறைந்த மைந்தனே
பத்தர்கள் பக்தியோடு பாடி நின்றோம் பாருமே

முடுகு

மத்தளங்கள் முழுவதிர உடுக்கொலியும் சேர்ந்தொலிப்ப
சப்த நாளம் ஒடுங்க உடல் கிடுகிடென்று நடுநடுங்க
(காத்தானே)

முடிப்பு

வித்தாரக் கூத்தினிலே சிந்தை குளிர்வாய்
சித்து விளையாட்டினிலும் வித்தை காட்டுவாய்
நத்தும் கடல் அலை பெருக நின்று சிரித்தாய்
எத்தி உதைத்துத் தாயை காத்து காத்தவன் ஆனாய்

முடுகு

அட்டதிக்கும் அதிர்ந் தொலிக்க அட்டகாசச் சிரிப்பினோடு
இட்ட குலதெய்வம் இங்கு துட்டர்களை துவம்சம் செய்ய
(காத்தானே)

# ஆன்மிக நெறி

மனித வாழ்வோடு ஆன்மிகமும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை அனுபத்தால் உணர்ந்தவர்கள் இந்து தத்துவ ஞானிகள். சைவசமயம் வழங்கும் தர்ம நெறிகளை அறிந்து, தெளிந்து வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுதலே ஆன்மிக வாழ்வு. ஆன்மிக நெறிதான் அதர்மத்திலிருந்து மனிதனைக் காப்பாற்றி வரு கின்றது. ஆன்மிகம் இல்லையேல் மனித வாழ்வில் சாந்தி, சமாதானம் இல்லை. மனிதன் எதிர்பார்த்ததற்கு மேலாகவே விஞ்ஞானம் இன்று வளர்ந்து விட்டது. ஆனால் மனிதப்பண்பாடு வளரவில்லை, தர்மம் வளரவில்லை. மனிதனாக நீதி வளரவில்லை, நியாயம் வளரவில்லை, மனிதனை மதிக்கும் பண்பு வளரவில்லை. இதற்கெல்லாம் காரணம் மக்களிடையே ஆன்மிக உணர்வு இன்னமும் முழுமையாக வளர வில்லை. என்பதே . இலங்கை , இந்தியா போன்ற கீழைத்தேச நாடு களில் ஆன்மிகம் இன்று தொலைந்து கொண்டிருக்கின்றது. போதைப்பொருட்களுக்கு அடிமையாகி சமுதாயச் சீரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் எம் இளந்தலைமுறையினரின் உள்ளங்களைப் பண்படுத்த ஆன்மிகம் பற்றிய விழிப்புணர்வு அவசியமாகின்றது.

மனித வாழ்விற்கு இன்றியமையாதது தெய்வ பக்தி. நம்மை மீறிய சக்தி ஒன்றின் இயக்கதினாலேயே நாமனைவரும் செயற்படுகின்றோம். அந்தச் சக்தியின் பெயர்தான் தெய்வம். இறைவனோடு நாம் கொள்ளும் தொடர்பே ஆன்மிகம்" என அருளாளர்கள் கூறுவர்.

"முதற்பொருளாகிய பரம்பொருளை

உணர்வதும் அடைவதும் ஆன்மிகம்"

என இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவார்.

"பிற உயிர்கள் மீது அன்பு செலுத்துதல், உண்மையைக் கடைப்பிடித்தல், சீரிய ஒழுக்கம், பிறர் பொருள் வெஃகாமை பிரார்த்தனை என்பன ஆன்மிக நெறிகள்"

என்பது அண்ணல் மகாத்மாகாந்தியின் கூற்று. மானுடன் அறிந்த அடிப்படை ஆன்மிக நெறி " அன்பு". இது,

1) இறைவன் மீது நாம் செலுத்தும் அன்பு

2) பிற உயிர்கள் மீது நாம் செலுத்தும் அன்பு

என்றவாறு அமையும்.

"இறை உணர்வு கைவரப் பெறுதலே ஆன்மிகம்" என இறை அன்பை வேண்டி ஆன்மிக வழியைக் காட்டியவர்கள் சைவநாயன் மார்கள், ஆழ்வார்கள் இந்து தத்துவஞானிகள்.

"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்"

என திருமந்திரம் கூறும். பிற உயிர்கள் மீது நாம் அன்பு செலுத்தும் போது தான் இறையன்பு எமக்குக் கிட்டும். மனிதனாக இருந்தாலும், மிருகமாக இருந்தாலும், பறவையாக இருந்தாலும் யாவற்றின் மீதும் மனிதராகிய நாம் அன்பு செலுத்தப் பழக வேண்டும். இதனையே திருமூலர்

" யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"

என்கின்றார்.

இறை உணர்வு கைவரப் பெறுவதற்கு மனத்தூய்மை மிக அவசியமானது . இராமகிருஷ்ணர் மனத்தூய்மையைப் பெறுவதற்கு பின்வரும் வழிமுறையைக் கூறுகின்றார்.

"இறைவனுடைய திருநாமத்தை அடிக்கடி ஓது.
அவருடைய நாமத்தில் பூரண நம்பிக்கை வை.
அது உன் மனதைத் தூய்மை யாக்கும்"

அவசர வாழ்க்கையுடன் இன்றைய நாட்களில் இறை நாமத்தை ஓதும்போது எமது மன இறுக்கம் தளர்ந்து மனம் தூய்மையடையும் இறைவனுடைய திருநாமமாகிய "நமசிவாய" என்ற ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பினை சமயகுரவர் நால்வரும் தம் பதிகங்களில் பாடியுள்ளனர்.

" வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது

நாதன் நாமம் நமச்சிவாயவே"

என சம்பந்தரும்

"கற்றுணைப்பூட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்

நற்றுணையாவது நமச்சிவாயவே"

என நாவுக்கரசரும்

" நற்றவா உனை நான் மறக்கினும்

சொல்லும் நா நமச்சிவாயவே"

என சுந்தரரும்

" நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க

இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"

என மணிவாசகரும், இறை நாமத்தின் சிறப்பினைக் கூறுகின்றனர்.

மனித உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு மிக அவசியமான ஆன்மிக சாதனம் "பிரார்த்தனை" எம்மைப் படைத்துக் காத்தருளுகின்ற இறைவனுடன் நாம் கொள்ளும் தொடர்பே பிரார்த்தனை. நாம் எமக்காக மட்டுமில்லாமல் பிறருக்காகவும் பிரார்த்திக்க வேண்டும்.

"இறைவனை வேண்டுவதும், பூஜிப்பதும், பிரார்த்திப்பதும் மூட நம்பிக்கைகள் அல்ல. உண்பதும், பருகுவதும் அமர்வதும் , நடப்பதும் எவ்விதம் உண்மையான செயல்களோ அவற்றை விட வும் அதிக உண்மையான செயல்கள் அவை"

என்பது மகாத்மா காந்தியின் கருத்து. இந்துக்களின் வாழ்க்கையைப் பொறுத்தவரை நல்லொழுக்கமும் ஆன்மிக வாழ்வுக்குப் பக்கபலமாக அமைகிறது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரிலும் ஓம்பப்படும்"

என்பது வள்ளுவர் வாய்மொழி.

ஆன்மிகத்தில் ஈடுபாடு உடையவர்களாயினும் ஒழுக்கத்தில் தவறும்போது அவர்கள் ஆன்மிகத்திலிருந்து வழிதவறியவர்கள் ஆகின்றனர். இதற்கு உதாரணமாக அமைபவன் இராவணன், சிவபக்தனாக விளங்கிய போதும் "பிறன்மனை விழைதல்" என்ற தீய சிந்தனையினால் ஆன்மிகத்திலிருந்து வழுக்கி வீழ்ந்து விடுகின்றான். இராவணன், தக்கன் யாகங்கள் பல புரிந்த போதும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலிய தீயகுணங்கள் உடைய

வனாக விளங்கியமையால் அவனது யாகங்கள் எவையும் நற்பலனைக் கொடுக்கவில்லை.

எமது உணவுப் பழக்களினூடாகவும் நாம் ஆன்மிகத்தை வளர்த்துக்கொள்ள முடியும் எமது உணவுகளில்,

1) இன்பமான உணவு

2) துன்பமான உணவு

என இரு நிலைகளைக்காணமுடியும். இங்கு இன்பமான உணவு எனக் குறிப்பிடப்படுவது மரக்கறி வகை உணவுகளையே ஆகும். மரக்கறி உணவினை உண்ணும் போது எம்மிடையே சாத்வீக குணம் உருவாகும். துன்பமான உணவு என்பது மாமிசத்தைக் குறிப்பிடும். மிருகங்களைக் கதறக் கதற அடித்துக் கொன்று அவற்றின் மாமிசத்தை நாம் புசிக்கும் போது அந்த விலங்கின் துன்பம் எம்மிடம் வந்து சேர்ந்து விடுகின்றது.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்பது குறள்.

தொகுத்து நோக்கும் போது, இறைபக்தி பிரார்த்தனை, நல்லொழுக்கம், உண்மை, இன்னாசெய்யாமை ஆகிய ஆன்மிக நெறிகளைப் பின்பற்றும் போது ஆன்மிக உணர்வும் எம்மிடையே வளரும் என்பதில் ஐயமில்லை. மாணவ உள்ளங்களில் ஆன்மிகச் சிந்தனைகளை வளர்த்தெடுப்பதில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஆலயங்களும், ஆன்மிகத் தலைவர்களும் பெரும் பங்களிப்பை நல்க வேண்டும்.

பிள்ளையார் வழிபாடு மிகவும் எளிமையானது. கல், மண், மரம், செம்பு முதலியவற்றால் இறைவனின் திருவுருவங்களைச் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. ஆனால், மண், பசுஞ்சாணம், மஞ்சள், மரக்கல், கருங்கல், பளிங்குக்கல், தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள், முத்து, பவளம் போன்ற ரத்தினங்கள், தந்தம், வெள்ளெருக்கு வேர், அத்திமரம், பசு வெண்ணெய், அரைத்த சந்தனம், வெண்ணீறு, சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றால் விநாயகர் வடிவத்தை அமைக்கலாம். இதனைத் தான் பிடித்து வைத்தால் பிள்ளையார் என்று வேடிக்கைப் பழமொழியாக நாட்டுப்புறத்தில் சொல்லுவர். புற்றுமண், அரைத்தமாவு, சாளக்கிராமம்(நர்மதை நதிக்கல்) ஆகியவற்றை ஒரு கைப்பிடி பிடித்தாலே அது பிள்ளையாராகி விடும் என்பதால் இவ்வாறு கூறினர். கும்பத்திலும், கூர்ச்சத்திலும், ஓமாக்கினியிலும் விநாயகப்பெருமானை ஆவாஹனம் செய்து வழிபடுவர்.

## நல் அருளை அள்ளித் தரும் காத்தவராயன்

கும்பிட கும்பிட பல் ஆசிகளை
அள்ளித்தருவான் எம் -காத்தவராயன்

அவன் பாதங்களை வணங்கினால்
எமக்கு ஒரு குறையும் - வந்து சேராது

நாம் செய்யும் பாவங்களை போக்கி
புண்ணியங்களை அள்ளித் தருவான் எம் - காத்தவராயன்

அவனை தேடி வரும் அடியவர்களின்
இன்ப துன்பங்களில் கலந்து நல் - அருளை வழங்குவான்

அவனை நம்பி வருபவர்களுக்கு
இந்த அவனியில் ஒரு -துன்பமும் கிடையாது.

- வரதவேல் மிதுர்ஷா -

**************************************************************************

## சைவ சமய ஒழுக்கங்கள்

*சைவம் என்பது சிவனைக் குறிக்கின்றது. சிவபெருமானை முழு முதற் கடவுளாக வணங்குகின்ற சமயமே சைவசமயமாகும். சைவர்களாகிய நாம் எமக்குக் கூறப்பட்டுள்ள ஒழுக்கங்களை மதித்து நாளாந்தம் நம் வாழ்க்கையில் பின்பற்றி வாழ்வோமானால் நம் வாழ்வு சிறப்பானதாக அமையும். அவ்வாறே மாணவர்களுக்கும் அவர்களுக் குரிய ஒழுக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன.*

*மாணவர்களுக்குரிய ஒழுக்கங்களாக முகம் கழுவுதல், நித்திரை விட்டெழுதல், பல்துலக்கி முகம் கழுவுதல், கடவுளை வழிபடுதல், தந்தை தாய் பணிதல், இறைவனை நினைத்து உணவு உண்ணுதல், யாவரிடமும் அன்பாகப் பேசுதல் போன்றவற்றைக் கூறலாம். எனவே மாணவர்களாகிய நாமும் இச் சைவசமயம ஒழுக்கங்களைப் பின்பற்றி நல்வாழ்வு வாழ்வோமாக.*

செல்வி ஜெயசீலன் ஷாமிலிசா
தரம்-1
யா/நெ.மெ.மி.த.க.பாடசாலை

## “காத்தானை” வணங்குவோம்

தாத்தாவுக்குத் தெரிந்தவை
எங்களுக்குத் தெியாது
தாத்தாவே “காத்தான்”
கதை சொன்னார்

வெடியால் கதை சொல்பவர்
வேண்டியவர்க்கு அருள் புரிபவர்
வேவிலந்தைக்கு அருகில் இருப்பவர்
வெடிக் காத்தான் என்று பெயர் பெற்றவர்



திருவெம்பா என்றால்
தெருவெல்லாம் களை கட்டும்
பொங்கல் வைப்பர்
மோதகம் அவிப்பர்

கடலை அவல் பழங்கள்
எல்லாம் சேர்த்தே படைப்பர்
பூசை வைப்பர்
படையல் கொடுப்பர்


சந்தோஷத்திற்கு குறைவே இல்லை
இன்னும் நிறையச் சொன்னார்
அன்று போல இன்றும்
அகம் மகிழும் காலமாச்சே


எழுந்து வா “வெடிக்காத்தானே”
வேடிக்கை விநோதம் செய்
பக்தி உலகைப் படை
வணங்கிடுவோம் நாமும்...

- றுபேஷ் ஹரிஷ்னி
தரம் - 3
யா/வதிரி வடக்கு மெ.மி.த.க.

2019 அலங்கார உற்சவ பதிவுகளில் சில...














2019 அலங்கார உற்சவ பதிவுகளில் சில...








# ரஞ்சன் ஸ்ரோர்ஸ்

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே இடம் "ரஞ்சன் ஸ்ரோர்ஸ்"

மக்கள் தேவை அறிந்த பல்பொருள் விற்பனை நிலையம்

## அல்வாயின் முதற் தர விற்பனை நிலையம்





உரிமையாளர் : இ.ரஞ்சன்

தொடர்புகளுக்கு: மனோகரா, அல்வாய்



# பரணீ புத்தகக்கூடம்

# பரணீ அச்சகம்

நெல்லியடி ம.ம.வீதி.

நெல்லியடி

0775991949

புத்தகங்கள்

கல்வெட்டுக்கள்

அழைப்பிதழ்கள்


பயிற்சி வினாத்தாள்கள்



எம்மால் அச்சிடப்பட்டுத் தரப்படும்

பாடசாலை, உபகரணங்கள், பாடப்புத்தகங்கள்

பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்


AJS ENGINEERING
Professional . Innovative . Reliable
TESLA
ENGINEERING
சூரிய மின்கட்டமைப்பிலிருந்து
மாதாந்த வருமானம் ஒருலட்சம்
வரை பெற்றுக்கொள்ளலாம்
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
OUR SERVICES
PLANNING
3D MODELING
ESTIMATION
CONSTRUCTION
REAL ESTATE
MATERIAL SUPPLY
SOLAR PANELS
LANDSCAPING
INTERIOR WORKS
WATER PROOFING
Seetha bavan,
Alvai south,
Vathiry.
No.45,Nelson Place
Colombo 06
Call us Now
0779140042, 0212265856,


GO GREEN WITH
MURREY
MURREY ENGINEERING CONSULTANCY
ENGINEERS & ARCHITECTS
MURREY
MOB: 00 9477 324 5814
00 9471 904 2624
EMAIL: k.muralee@hotmail.com
CONSTRUCTION & CONSULTANCY SERVICES
ARCHITECTURAL DRAWINGS ( 2D & 3D ILLUSTRATION)
STRUCTURAL DRAWINGS
BOQ
INNOVATIVE SOLUTIONS FOR REPAIRS AND RENOVATION
QUALITY CONTROLLED SERVICES
EXPERIENCED STAFF
HIGH SKILLED LABOURS
DEFECT RELIABILITY
100% WORTH ECONOMICAL MODERN DESIGNS
INTRODUCING GREEN CONCEPTS FOR ZERO CARBON
ENERGY EFFICIENT BUILDINGS


AGN
MOBILE SHOP
airtel
HUTCH
PHONE SALE & REPAIRING
SIM CARD, RELOAD & CARD
MAIN STREET, NELLIADY
agnmobileshop@gmail.com
agnmobileshop
021 433 0010
077 604 2800
077 343 0211
076 298 1439